ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

எட்டாம் வகுப்பு - அறிவியல் பருவம்-3 தேர்வு-1(அலகு-7)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. காந்த ஊசி ______________________ பயன்படுகிறது.
   அ. காந்தவிசைக் கோடுகளை வரைய ஆ. கடல் பயணத்திற்கு
   இ. காந்தப்புலத்தின் திசையை அறிய ஈ. மேற்காண் அனைத்தும்

2. ______________________ நிலைத்த காந்தத்திற்கு எடுத்துக்காட்டாகும்.
   அ. முமெட்டல் ஆ. நியோடிமியம் இ. மின்காந்தம் ஈ. தேனிரும்பு

3. பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படும் பொருள்
   அ. மரப்பொருள்கள் ஆ. தாமிரம் இ. இரும்பு மற்றும் எஃகு ஈ. வெள்ளி

4. கற்பனையான புவிக் காந்தப்புலம் எந்த வடிவத்தினைப் போன்றது?
   அ. சட்டக்காந்தம் ஆ. வரிசுருள் இ. U வடிவ காந்தம் ஈ. நேர்க்கடத்தி

5. ஒரு சட்டக் காந்தத்தின் தென்முனையும், U வடிவ காந்தத்தின் வடமுனையும் ______________.
   அ. ஒன்றையொன்று கவரும் ஆ. ஒன்றையொன்று விலக்கும்
   இ. ஒன்றையொன்று கவரவோ, விலக்கவோ செய்யாது.
   ஈ. மேற்கண்டவற்றுள் எதுவுமில்லை.

II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. மேக்னடைட் | - | டயா காந்தப்பொருள்கள் |
| 2. பிஸ்மத் | - | காந்த விசைக்கோடுகள் |
| 3. கோபால்ட் | - | இயற்கைக் காந்தம் |
| 4. வளைபரப்புகள் | - | காந்த ஊசிப்பெட்டி |
| 5. ஒரு சிறு சுழலும் காந்தம் | - | ஃபெர்ரோ காந்தப் பொருள்கள் |

III. சரியா? தவறா என எழுதுக.

1. காந்தங்கள் இரப்பர், கண்ணாடி போன்ற பொருள்களால் கவரப்படும்.
   அ. சரி ஆ. தவறு
2. காந்தங்கள் இயற்கை காந்தங்கள் மற்றும் செயற்கைக் காந்தங்கள் என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அ. சரி ஆ. தவறு
3. காந்தத்தின் ஓரின முனைகள் ஒன்றையொன்று விலக்கும். வேறின முனைகள் ஒன்றையொன்று கவரும். அ. சரி ஆ. தவறு
4. காந்தத்தின் நடுப்பகுதி அதிகம் கவரும் தன்மை உடையது.
   அ. சரி ஆ. தவறு
5. தங்கு தடையில்லாமல் தொங்கவிடப்பட்ட காந்தம் எப்பொழுதும் கிழக்கு மேற்கு திசையை நோக்கி நிற்கும். அ. சரி ஆ. தவறு

LIVEWORKSHEETS

IV. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தடையின்றி தொங்கவிடப்பட்ட காந்தம் எப்பொழுதும் ________ வட, தென் முனைகளை நோக்கி இருக்கும்.

2. காந்தத்தின் வலிமை அதன் முனைகளில் ____________.

3. கனமான இரும்புப் பொருள்களை உயர்த்தப் பயன்படுவது ______________.

4. ஒரு காந்தம் ________ முனைகளைக் கொண்டது.

5. மின்சார உற்பத்திக்குப் பயன்படும் காந்தங்கள் ___________.

**விடைகள்**

அதிகம் இரு டைனமோ

மின்காந்தங்கள் புவியின்

LIVEWORKSHEETS